**வா.சா.2 சரவணன் அவர்களின் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை. அதனை 5 முதல் 9 பிரதிவாதிகள் ஏற்றுக் கொள்கிறார்கள்.**

நான் வாதியின் பேரன். வாசா.1 விசாரணையின் போது அவருடன் வந்தேன். சில சமயம் என் சகோதரி சண்முக பிரியா (வழக்கறிஞர்) என்பவரும் வந்தார். வாசா.1 தன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் சொல்லும் சங்கதிகளை நான் ஒப்புக் கொள்கிறேன். வாசா.1ன் முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 26ல் தாவா சொத்துக்களில் தான் எந்த காலத்திலும் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்தது கிடையாது என குறிப்பிட்டு இருக்கிறார். அதனால் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் அதற்கு மாறாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாசா.1ன் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 2ல் இருந்து 25 வரை உள்ள கூறியுள்ள சங்கதிகளை அப்படியே எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனவே நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதற்காக நான் முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் வழக்குரையை நான் படித்து பார்த்து இருக்கிறேன். நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள கதவு எண்.270 கான வரி ரசீதை பொருத்த வரையில் அது வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சர்வே எண்.342/7 க்கு நடைபெறுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் மேற்படி சர்வே எண் உள்ளது. அது ExB12. அதில் ஒரு இடத்தில் கட்டிடம் காட்டப்பட்டுள்ளது. அது

பிரதிவாதிகள் தரப்பில் கட்டப்பட்ட வீடு என்றால் சரியல்ல. நாங்கள் தான் கட்டினோம். மேற்படி வழக்கு கிராமத்தில் இருந்து விவசாயம் செய்வதற்காக அந்த காலத்தில் அங்கு உள்ள மக்கள் கர்நாடகாவிற்கு சென்றார்கள் என்றால் சரிதான். அதுபோல தான் 1ம் பிரதிவாதியும் சென்றார்கள் என்றார் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி தோராய பட்டா 4ம் பிரதிவாதி மற்றும் அவர் தகப்பனார் பெயரில் இருக்கிறது என்றால் சரிதான். அது ExB13. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை பொருத்து A15 ஆவண செட்டில்மென்ட் பொருத்து வீடு கட்டப்பட்டு உள்ளதால் முத்திரை தாள் அதிகம் கேட்டு கொடுக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். என் தாத்தா நல்ல நினைவாற்றல் உடன் இருப்பதால் அவருக்கு சொத்து விவரம் பற்றி தெரியும் என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.02.12 17:59:50 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.